
# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ஜனவரி 11, 2025 Weekly E-paper ● January 11, 2025

## சீமான் (வழியாக) பெ.மணியரசனுக்கு!

பழ.புகழேந்தி

## பொங்கல் விழா!

## காவிக்கு எதிர் திராவிடம்!

தலையங்கம்

## கல்விக் கட்டமைப்பைச் சிதைத்து மாநில உரிமையைப் பறிக்கும் யூ.ஜி.சி !

வழக்கறிஞர் இராம.வைரமுத்து


# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2055 ஜனவரி 11, 2025 Weekly E-paper • January 11, 2025


## சீமான் (வழியாக) பெ.மணியரசனுக்கு!

பழ.புகழேந்தி



பெரியாரை 'பெரியார்' என்று அழைப்பதைத் தவிர்த்து 'ஈ.வெ.ரா' என்று அழைக்கிற இடத்துக்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி. தமிழர்களை தமிழ் இந்துக்களாக மாற்றும் உங்கள் முயற்சிக்குப் பெரியார் பெருந்தடையாக இருப்பார் என்று புரிந்து வைத்திருக்கும் அளவுக்கு இன்னும் கொஞ்சம் அரசியல் தெளிவு மீதமிருக்கிறது உங்களுக்கு.

உங்களிடம் சில கேள்விகள்.

பெரியார் 1973ஆம் ஆண்டோடு தன் செயல்பாடுகளை நிறுத்திக் கொண்டுவிட்டார். அதற்குப் பிறகு அவர் பேசவோ எழுதவோ இல்லை.



ஆனால், நீங்கள் அதற்குப் பிறகும் கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாகப் பெரியாரைப் புகழ்ந்து கொண்டுதான் இருந்தீர்கள். திருவரங்கத்தில் உள்ள பெரியார் சிலை சேதப்படுத்தப்பட்ட போது, தமிழர் கண்ணோட்டத்தின் அட்டைப்படத்தில் பெரியாரைப் போட்டு, பெரியாரின் பெருமைகளைப் பட்டியலிட்டு மூன்று பக்கத் தலையங்கம் தீட்டினீர்கள்.

அந்நிகழ்வுக்கு எதிராக உங்கள் த.தே.பொ.க தோழர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டுக் கைதான கதையெல்லாம் இன்னமும் நினைவிருக்கிறது எனக்கு.

நிற்க... நான் கேட்க வருவது, பெரியாரைப் படிக்காமலேயேதான் பெரியாரைப் புகழ்ந்து கொண்டிருந்தீர்களா? அதற்கும் முன்பாகவே நீண்ட காலமாக அரசியலில் பயணித்தவர்தானே நீங்கள்? தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட, கோட்பாடு சார்ந்த அரசியலில் இயங்கிய நீங்களே பெரியாரைப் படிக்காமல் எதற்காகப் புகழ்ந்தீர்கள்? நீங்கள் ஒன்றும் தனியறையில் நான்கு நண்பர்களோடு பேசிக் கொண்டிருக்கவில்லை. பொதுவெளியில் ஒரு கருத்துருவாக்கத்தை உண்டு பண்ண மக்கள் மன்றத்தில் செயல்பட்டீர்கள்.

ஆயின், நீங்கள் முழுமையாகப் படித்து முற்றாகத் தெரிந்து கொள்ளாத ஒருவரைப் பற்றி நேர்மறையாக மக்களிடம் எதற்காகப் பரப்புரை செய்தீர்கள்? அந்தத் தலையங்கத்தில் பெரியார் செய்ததாக நீங்கள் பட்டியல் இட்டீர்களே, அவை எல்லாமே பொய் என்று இப்போது ஒத்துக் கொள்கிறீர்களா? ஆயின், அந்தப் பொய்களைச் சொல்ல வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏன்?

ஆரியம் தலை தூக்க முயல்கிற இந்தப் பொழுதில், திடீரென்று பெரியாரை முழுமையாகப் படித்து தமிழர்களுக்கு எதிரானவராய் அவரை நிறுவ இக்காலகட்டத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்? இனவுணர்வும் மொழிஉணர்வும் உள்ளவர்கள் பெரியாரியத் தொண்டர்கள்தான் என்பதைக் கண்டுபிடித்து அவர்களை உங்கள் பக்கம் ஈர்க்கிற முதல் முயற்சிதானே நீங்கள் முதலில் செய்தது? பின், பெரியாருக்கு எதிராக கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து முழுமையான பெரியார் எதிர்ப்பை முன் வைக்கும் போது, வந்தவர்களில் பத்து சதவீதம் பேராவது நம்மிடமே தேங்கி நின்றாலும் லாபம்தானே என்கிற நப்பாசையின் நீண்ட காலத்திட்டத்தின் ஒருபகுதிதானே உங்களின் முந்தைய பெரியார் புகழுரைகள் எல்லாம்?

நல்லதுதான். ஊடுறுவிக் கெடுக்கிற இடத்திலிருந்து விலகி பெரியாரின் நேரடி எதிரியாய் வெளிப்பட்ட வரைக்கும் நன்றி.

இனி உங்களுக்கு எதிராக நீங்களே போதும். நாங்கள் தேவையில்லை.

(முகநூல் பக்கத்திலிருந்து) •

# பொங்கல் விழா!



● புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

தமிழகமே, திராவிடமே, தைம்மு தல்நாள்
தனிலுன்னை வாயார வாழ்த்து கின்றேன்.
அழிழ்தான பாற்பொங்கல் ஆர உண்டே
அதைஒக்கும் தமிழாலே வாழ்த்து கின்றேன்;
எமைஒப்பார் எவருள்ளார்? எம்மை வெல்வார்
இந்நிலத்தில் பிறந்ததில்லை; பிறப்ப தில்லை
இமைப்போதும் பழிகொண்டு வாழ்ந்த தில்லை
உணர்வால் வாழ்த்துகின்றேன் வாய்ப்பேச் சல்ல.




# திருவள்ளுவர் நாள்



## கலகக்குரலோன்...

தமிழகத்தில் புகுந்த வைதீகப் பார்ப்பனர்கள் தமிழ்நாட்டு அரசு அதிகாரத்திற்கு அருகில் அமர்ந்துள்ளனர். "ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல் படச் சொரிந்த" தமிழ் மன்னர்கள் இருந்திருக்கிறார்கள். மறு புறமாக, வைதீகத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த சமண, பௌத்த மதங்கள் தமிழ் நாட்டில் தங்கள் செல்வாக்கைப் பரப்பத் தொடங்கியிருந்தன. வள்ளுவர் வைதீகத்திற்கு எதிராகக் குரலெழுப்பியவர், 'பிறப்பு வழி வேற்றுமையே', வைதீகக் கொள்கையின் உயிர்நாடி. இந்தக் கொள்கை அதிகாரத்திற்கு நெருக்கமாக இருந்த பொழுது 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்ற வள்ளுவரின் குரல் கலகக் குரல்தானே. அதுபோல 'அந்தணர்' என்ற சொல்லைப் பார்ப்பனர்கள் தமக்கு வழங்கிய காலத்தில், வள்ளுவர் அச்சொல்லுக்கு 'அந்தணர் என்போர் அறவோர்' என்ற எதிர்மறை வரைவிலக்கணம் தர முற்படுகின்றார்.

- தொ.பரமசிவம் எழுத்திலிருந்து...



## வள்ளுவர் மாண்பு

கணிகை அல்லது பரத்தை என்றோர் (சமூகப்) பிரிவு உருவானதில் சமூகத்தின் பங்கும் உள்ளது. ஆணாதிக்கத்தின் தேவைக்காக உருவான இச்சமூகப் பிரிவில் பாதிக்கப் பட்டவர்கள் பெண்கள்தாம். ஆனாலும் இங்கே 'பரத்தை' 'விலைமகள்' 'பொதுமகளிர்' என்றெல்லாம் பழித்துப் பேசப்பட்டவர்கள் பெண்கள் என்பதற்கு சங்க இலக்கியங்களில் சான்றுகள் உண்டு. ஆனால் பெண்களை இப்படிப்பட்டப் பெயர்களால் இழித்துக் கூற விரும்பாத பெரும் புலவர் திருவள்ளுவர் மிகப் பண்புடைய நாகரீகமாக 'வரைவின் மகளிர்-(92) என்று சொல்கிறார். வரைவு என்றால் திருமணம். வரைவு இல்லாத பொதுமகளிர் என்பது இதன் பொருள். பெண்ணை மதிக்கும் வள்ளுவர் பரத்தை என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை, எங்கும். ஆனால் இவர் ஆணைப் 'பரத்தன்' என்ற சொல்லால் (1311) சாடுகிறார். வள்ளுவத்திற்குப் பின்வந்த சிலப்பதிகாரம் (12:200), மணிமேகலை (7:50), அகநானூறு (145 - 9) போன்ற நூல்களும் ஆண் பரத்தர்களைப் பேசுகின்றன. அதுமட்டுமன்று, மனைவியை உயர்வாகக் கருத 'வாழ்க்கைத் துணை' என்று பொதுமை மணம் கமழப் பேசுகிறார் வள்ளுவர்.

- எழில்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

# காவிக்கு எதிர் திராவிடம்!

தமிழ்நாட்டில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவது மரபு, உரிமை. இறுதியில் நாட்டுப்பண் பாடுவதற்குமுன் ஆளுநர் ஆர்.என்.ரவி அவசரப்பட்டு வெளியேறினார் என்று சொல்லமுடியாது. சட்டப்பேரவையை அவமரியாதை செய்வதன் மூலம் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களை அவமதித்து விட்டார் அவர் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஒன்றிய அரசின் பிரதிநிதி ஆளுநர் என்பதால், இவருக்குப் பின்னால் மோடியின் நிழல் தெரிகிறது.

புதிய கல்விக் கொள்கை, நீட் போன்ற ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழர்களும் பாஜகவைப் புறக்கணிக்கிறார்கள் என்பதால் தமிழ்நாட்டின் மீது வெறுப்பை உமிழ்கிறார்கள் அவர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு பேரவையில் ஆளுநரின் செயல்.

பேரவையில் நாட்டுப்பண் பாடவில்லை என்று ஆளுநர் சொல்வது உளுத்துப்போன வாதம். அவர்களுக்கு வழிகாட்டும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் நிகழ்ச்சிகளில் 'தேசியகீதமே' பாடுவதில்லை என்பது ஆளுநருக்குத் தெரியாதா?

தைத்திருநாள் பொங்கல் தமிழர்களின் தலையாய விழா. அந்த நாளில் கூட தமிழர்கள் நிம்மதியாக இருக்கக் கூடாது என்று யுஜிசி நெட் தேர்வை பொங்கல் அன்றே நடத்துவதாகத் திட்டமிட்டே அறிவிக்கப்பட்டு இருப்பதும் தமிழர்களுக்கு எதிரான செயல். அந்தத் தேர்வை வேறு ஒருநாளில் நடத்தலாம் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே கடிதம் எழுதி இருப்பதோடு, அதற்கு எதிரான தனித்தீர்மானத்தை சட்டப்பேரவையில் நிறைவேற்றவும் செய்திருக்கிறார்!

ஆனாலும் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல இருக்கிறது ஒன்றியம்.

ஒட்டுமொத்த அதிகாரங்களையும் கைப்பற்றும் நோக்கோடு ஒன்றிய அரசின் ஒரேநாடு ஒரேதேர்தல் என்ற சர்வாதிகாரக் காவிஅதிபர் ஆட்சிக்கு வழிகோலுகிறது காவிக் கூட்டம்.

காவிக்கு எதிர்நிலை திராவிடம். திராவிடத்தின் பின்னால் அணிவகுப்போம், காவிக்கு எதிராக!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை– 600 024,**
தொலைபேசி: 044-2472 6408







தந்தை பெரியாருக்கு எதிராகப் பேசும் சீமானைக் கண்டித்து 05-01-2025 அன்று சென்னை, சைதை தேரடியில் நடைபெற்ற திரளான கூட்டத்தில் பேரவைத் தலைவர் கண்டன உரையாற்றினார். பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், துணைப் பொதுச் செயலாளர் உமா, வழக்கறிஞர் பசும்பொன் பாண்டியன், புதுவை தீனா, இந்திரக்குமார், முத்தையா குமரன், தலைமை நிலையச் செயலாளர் எட்வின், இளைஞரணித் துணைச் செயலாளர் இளமாறன் ஆகியோர் உரையாற்றினார்கள். தோழர்கள் வழக்கறிஞர் அருள்மொழி, விடுதலை இராஜேந்திரன், பெல் ராஜன், சிங்கராயர், காசு. நாகராசன் உள்ளிட்டோரும், பேரவைத்தோழர்களும்பார்வையாளர்களாக கூட்டத்தைச் சிறப்பித்தனர்.

# கல்விக் கட்டமைப்பைச் சிதைத்து மாநில உரிமையைப் பறிக்கும் யூ.ஜி.சி!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து






பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனத்திற்கான குறைந்தபட்ச தகுதி மற்றும் தர நிர்ணய அளவீடு குறித்த 2018 ஆம் ஆண்டு விதிமுறைகளை மாற்றியமைத்து 2025 ஆம் ஆண்டு விதிமுறைகளை பல்கலைக்கழக மானியக் குழு (யூ.ஜி.சி) உருவாக்கி உள்ளது. அதன் வரைவு 06.01.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த வரைவு விதிமுறைகள் பற்றிய கருத்துக்களை 05.02.2025 வரை தெரிவிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

வரைவு விதிமுறைகளில் துணைவேந்தர் நியமனம் தொடர்பாக நடைமுறையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. முன்பு பேராசிரியர், ஆராய்ச்சி அல்லது கல்வி நிர்வாக பணிகளில் 10 ஆண்டுகள் அனுபவம் உள்ளவர்களே துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் இப்போது தொழில்துறை, பொது நிர்வாகம், பொதுத்துறை நிறுவனங்களில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவமுள்ள எவரும் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் கல்வி முற்றிலும் வணிகமயமாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இது வரை துணைவேந்தரைத் தேர்ந்தெடுக்க நியமிக்கப்படும் தேடுதல் குழுவில் சிண்டிகேட் உறுப்பினர் ஒருவர், செனட் உறுப்பினர் ஒருவர் மற்றும் அரசு பிரதிநிதி ஒருவர் இடம் பெற்றிருப்பர். ஆனால் தற்போது தேடுதல் குழுவில் ஆளுநரின் பிரதிநிதி ஒருவர், யூ.ஜி.சி பிரதிநிதி ஒருவர், சிண்டிகேட் அல்லது செனட் உறுப்பினர் ஒருவர் இருப்பர் என்றும், ஆளுநரின் பிரதிநிதி குழுவின் தலைவராக இருப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனால் மாநில அரசின் அதிகாரம் பறிபோகும்.

யூ.ஜி.சி வெளியிட்டுள்ள புதிய மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் அதன் எந்த திட்டங்களிலும் பல்கலைக் கழகங்கள் பங்கேற்க இயலாது முடியாது என்று வரைவு விதிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால் பல்கலைக்கழகங்களுக்கு ஒன்றிய அரசு நிதி எதுவும் வராது. ஏற்கனவே நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள பல்கலைக்கழகங்கள் முடங்கும் நிலை இதன் மூலம் ஏற்படும்.

தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் யூ.ஜி.சியின் புதிய விதிமுறைகளை கடுமையாக எதிர்த்ததுடன் அதை திரும்ப பெற வலியுறுத்தி சட்டப்பேரவையில் தனித் தீர்மானத்தையும் நிறைவேற்றி உள்ளார். யூ.ஜி.சியின் புதிய விதிமுறைகளுக்கு அனைத்து பல்கலைக்கழக பேராசிரியர் மற்றும் பணியாளர்கள், கல்வியாளர்கள் என பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அதிகாரங்களை பறித்து நியமனப் பதவியில் இருக்கும் ஆளுநரிடம் வழங்கும் இந்த எதேச்சதிகாரப் போக்கை தடுத்து நிறுத்தும் கடமையும் பொறுப்பும் நம் அனைவருக்கும் உள்ளது. அப்போது தான் "நாட்டிலேயே உயர்கல்வி கட்டமைப்பில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடு" என்ற பெருமையை நாம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.**

பல்கலைக்கழகங்களுக்கு ஒன்றிய அரசு அளிக்கும் நிதியை ஒதுக்கீடு செய்யும் அதிகாரத்தை மட்டுமே பெற்றுள்ள யூ.ஜி.சி பல்கலைக்கழகங்களை தனது ஆளுகைக்குள் கொண்டு வர நினைப்பது முற்றிலும் தவறானது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசின் அதிகாரங்களை பறித்து நியமனப் பதவியில் இருக்கும் ஆளுநரிடம் வழங்கும் இந்த எதேச்சதிகாரப் போக்கை தடுத்து நிறுத்தும் கடமையும் பொறுப்பும் நம் அனைவருக்கும் உள்ளது. அப்போது தான் "நாட்டிலேயே உயர்கல்வி கட்டமைப்பில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடு" என்ற பெருமையை நாம் தக்க வைத்துக் கொள்ள முடியும்.